## ஒரு வியத்தகு மாற்றம் வெற்றிக்கதை – சென்னை

ஜி. தினகர்
கார்னேஷ்வரர் பழமுதிர் நிலையம்
47 கோன்ஸ் ரோடு
சைதாப்பேட்டை
சென்னை - 15
தொலைபேசி: 9566082100



என் பெயர் ஜி.தினகர் சென்னையில் வசித்து வருகிறோம். நாங்கள் 1995 ஆம் ஆண்டு முதல் சில்லறை பழமுதிர் நிலையம் தொடங்கி வியாபாரம் செய்து வருகிறோம். நாங்கள் இதுவரை யுகத்தின் அடிப்படையிலேயே பேரம் பேசி வியாபாரம் செய்து வருகிறோம்.

**தினசரி சந்தை நிலவரத்தின் உபயோகம்**

நான் தினசரி சந்தை நிலவரத்தை பற்றி உங்களின் சந்தை ஆய்வாளர் சொப்பணசுந்தரி - சென்னை அவர்களின் மூலம் தெரிந்து கொண்டேன். இது எனக்கு சந்தையில் மொத்த வியாபாரிகளிடம் இருந்து நேரடியாக கொள்முதல் செய்ய உதவியது. (இதுவரை பகுதி மொத்த வியாபாரியிடம் இருந்து பெற்று வந்தோம்). இதன் மூலம் என்னுடைய கொள்முதலில் விலை வித்தியாசத்தை தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது. நாங்கள் தற்பொழுது உங்களின் அலைபேசி சேவையின் மூலமாக ஒரு குறிப்பிட்ட பொருளின் விலையை தெரிந்து கொள்ள முடிகிறது. முன்பு நாங்கள் ஒரு சந்தையை மட்டுமே கவனத்தில் கொண்டு கொள்முதல் செய்தோம். ஆனால் இப்பொழுது அலைபேசி சேவையின் மூலமாக 13 சந்தைகளின் விலை நிலவரங்களை தெரிந்து கொள்ள முடிவதினால் சந்தையில் இருந்து நேரடியாக கொள்முதல் செய்ய உதவுகிறது.

**உதாரணம்:**

பப்பாளி: மொத்த வியாபாரியிடம் உண்மையானவிலை ரூ.10.00 / கிலோ. நான் அதே பொருளை பகுதி மொத்த வியாபாரியிடம் வாங்கும்பொழுது ரூ.13.00 / கிலோ. இந்த விலை வித்தியாசம்

அதிகம். தினசரி சந்தையின் விலை நிலவரத்தின் மூலமாக சரியான விலை தெரிவதினால் சந்தையில் சிறப்பாக கொள்முதல் செய்ய முடிகிறது.

**தினசரி சந்தை நிலவரத்தின் மூலமாக எனது அனுபவம்:**

இது என்னைப்போன்ற வியாபாரிகளுக்கு கொள்முதல் தொடர்பாக முடிவுகளை எடுக்க மிகவும் உதவியாக உள்ளது. ஒரே இடத்தில் பல்வேறு சந்தைகளின் விலை நிலவரங்களை தெரிந்து கொள்ள முடிவதினால் ஒரே பொருளை பல்வேறு இடங்களில் கண்டறிய முடிகிறது. இந்நேரங்களில் இந்த தகவல்களின் அடிப்படையில் வேறு சந்தைகளில் இருந்து நேரடியாக கொள்முதல் செய்ய முடிவதினால் மேலும் அது செலவுகளை குறைக்கவும் உதவுகிறது. உங்களின் இத்தகைய பணி சிறக்க எங்களின் வாழ்த்துக்கள்.